

FREE EDITION

June - 2017

# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 04 - 124

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

## ஏன் உடனே குறை தீர்க்கவில்லை?

“மகனே! தாயிடம் இவ்வளவு தூரம் மன்றாடி முறையிட்டேனே! அவள் என்னிடம் கருணை கொண்டு என் குறைகளை நீக்க முற்படவில்லையே என்று கலங்குகிறாய்! நான் யார் தெரியுமா? உலகனைத்தையும் ஈன்ற தாய் அல்லவா?

குழந்தை அழத் தொடங்குமுன் பால் கொடுப்பவள் சிறந்த தாய் அல்லள் ஏன் தெரியுமா? குழந்தை கால் கைகளை உதைத்துக்கொண்டு அழ வேண்டும். கண்களிலிருந்து கண்ணீர் வெளிப்பட வேண்டும். கண்ணீர் வெளிப்படும் பொழுதுதான் கண்ணீர்த்துளிகள் தூய்மை அடைகின்றன. கால் கைகளைக் குழந்தை உதைத்துக் கொள்ளும் பொழுதுதான் அவை வலுப்பெறுகின்றன. அவ்வாறு இல்லையானால் குழந்தையின் கால் கைகள் சூம்பிப்போய் விடும். ஆகவேதான் குழந்தையை ஓரளவு அழவிட்ட பின்னரே தாய் பால் கொடுக்கிறாள்.

நீங்களும் உங்கள் பிழைகளை நினைத்து வருந்திக் கண்ணீர் விட்டால் தான் உங்கள் மனம் தூய்மை அடையும். அதன் பின்னரே நான் அருள் செய்வேன்.”

- அன்னையின் அருள்வாக்கு

# புற்று நோயைக் குணப்படுத்திய அன்னை

**அ**ன்னை ஆதிபராசக்தியின் அருளை நாடிப் பெற்றவன் என்ற முறையிலே இங்கே நான் எழுதுகின்றேன். சற்றேறக்குறைய நான்கு ஆண்டிற்கு முன்பு எனது மாமியார் அவர்களுக்கு உணவுக்குழாய் வழியாக உணவு செல்லுவதில் இலேசாகத் தடை ஏற்பட்டது. உடனே நாங்கள் காது, மூக்கு, தொண்டை (E.N.T.) நிபுணரை அணுகினோம். அவர் எக்ஸ்ரே (X-Ray) முதலியன எடுத்துப் பார்த்துவிட்டு டானிக், மருந்து முதலியன சாப்பிட்டு வருமாறு கூறினார். இரண்டு மாதங்கள் ஓடின. நோய் தீர்ந்த பாடில்லை. மறுபடியும் நாங்கள் சத்தியமங்கலத்திலுள்ள மருத்துவ நிபுணரை அணுகினோம். அவர், “புற்று நோய் சம்பந்தமான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆகவே, உடனே கோவை பாப்பநாய்க்கன் பாளையம் குப்புசாமி நாயுடு மருத்துவமனைப் புற்றுநோய்ப் பகுதிக்கு அழைத்துச் செல்லுங்கள்” என்று கூறினார்.

சக்தி சு. சின்னசாமி, B.Sc.,
பவானி

நாங்களும் அவ்வாறே அங்கு அழைத்துச் சென்றோம். அந்த மருத்துவமனையில் சோதனைக்குப் பிறகு உணவுக் குழாயில் (தொண்டைப்பகுதியில்) புற்றுநோய் என்பது தெரிய வந்தது. பின் அங்கேயே மூன்று வாரங்கள் தங்கி கதிரியிக்க (Copalt) முறையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். அதன் பின் ஓரளவுக்கு நோய் குணமாகி உணவு சாப்பிடும் நிலையை அடைந்து வீடு திரும்பினார்கள். ஏறக்குறைய ஆறு மாதங்கள் ஓடியிருக்கும். திடீரென்று சென்ற ஆகஸ்ட் மாத இறுதியில் ஒரு நாள், “எச்சில் விழுங்க முடியவில்லை, தண்ணீர் கூட உள்ளே விழுங்க முடியவில்லை” என்று எனது மாமியார் அவர்கள் கூறினார்கள். உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கே புற்றுநோய்த் துறையிலே தலைசிறந்த நிபுணர் எங்களிடம், “நோயாளியை ஊருக்கு அழைத்துச் சென்று இரண்டு நாட்களுக்குக் குளுகோஸ் உணவு, ஊசி மூலம் செலுத்திய பின், மூக்கு வழியாக ரப்பர்க்குழாய் மூலம் தான் உணவு செலுத்தப்பட வேண்டும். வேறு வழியில்லை”என்று கூறி அனுப்பிவிட்டார்கள்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## ஆன்மிக ஈடுபாடு:

**“இனிவரும் காலம் பொல்லாத காலம்.
தருமம், அதருமம் என்னும் சிந்தனைகள் இருக்காது.
எந்த வம்புதும்புகளிலும் அகப்பட்டுக் கொள்ளாமல்
ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்தால் தப்பலாம்.”**

- அன்னையின் அருள்வாக்கு

அன்னையின் அருள்வாக்கு:

**“நீ படித்த படிப்பும், பொருளும் கூட வராது. பண்பும், பராசக்தியின் பாசமும் தான் கூட வரும்.”**

## “ஜோதி”

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான ‘சக்தி ஒளி’ மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக ”ஜோதி” ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: “Jothi Newsletter”**

## செய்திச்சுடரில்…


**புற்றுநோயைக் குணப்படுத்திய அன்னை**
Page: 1 – 3

**உச்சந்தலையில் நெருப்பு**
Page: 15 - 17

**UPCOMING EVENTS**
Melbourne: 4, 13, 14
Sydney: 5, 12

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 18

**அருள்வாக்கும் அனுபவங்களும்…**
பக்கம்: 7 - 13

**Divine Miracles**
Page: 5

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 17

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 18


## புற்றுநோயைக் குணப்படுத்திய …

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஊர் திரும்பி இரண்டு நாட்கள் குளுகோஸ் உணவு கொடுத்த பின் மீண்டும் கோவை சென்று அந்தத் தலைசிறந்த மருத்துவரிடம் கேட்டேன் மூக்கு வழியாக ரப்பர்க் குழாய் மூலம் உணவு செலுத்திக் கொள்வதில் நோயாளி தயக்கம் காட்டுகிறாரே வேறு வழியே இல்லையா என்று கெஞ்சினேன். அதற்கு அவர் டாக்டர் என்ற முறையில் நான் சொல்வதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும். நோயாளியின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. தாகத்திற்கு தண்ணீர் கூடச் சாப்பிட முடியாத நிலையில் நீங்கள் நோயாளியை எப்படி வைத்திருக்க முடியும் என்று வினவினார். மீண்டும் ஊருக்கு விரைந்தேன். மருத்துவ நண்பர்களைக் கலந்தாலோசித்தேன். ரப்பர் குழாய் மூலம் மூக்கு துவாரம் வழியாக உணவு செலுத்தும் செயல் சிரமமானது தான் என்றனர்.

இதற்கிடையில் என் துணைவியும் மாமியார் அவர்களும், அவர் குணமாகி வந்தபின், அன்னை ஆதிபராசக்தி எழுந்தருளியிருக்கும் மேல்மருவத்தூர் வந்து அன்னையை நேரில் தரிசிப்பதாக வேண்டிக் கொண்டார்களாம். ஆகவே அந்த வேண்டுதலை இப்பொழுது சென்று நிறைவேற்றிக்கொண்டு அன்னையிடமே நேரில் முறையிடலாம் என்று கூறினார். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை மாலை புறப்படுவதாக முடிவு செய்தோம். அன்னையின் மீது முழுப்பாரத்தையும் போட்டுவிட்டோம்.

அன்று வியாழக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் திடீரென்று எனது மாமியார் அவர்களுக்குக் காய்ச்சல். உடனே டாக்டரிடம் அழைத்துச் சென்றோம். டாக்டர் ஓர் ஊசி மருந்தைச் செலுத்தினார். வீடு திரும்பினோம். ஒரு செம்பு நிறையத் தண்ணீர் அருந்தினார்கள். மூன்று நாட்களாக ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்த முடியாத அவர்களுக்கு அன்னையின் மேல் பாரத்தைப் போட்டதும் இவ்வளவு உடனடி நிவாரணமா என்று வியந்து போனோம்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை மாலை நான், என் மனைவி, மாமியார் அவர்கள், மற்றும் உறவினர் இருவர் ஆக ஐவரும் புறப்பட்டு அடுத்த நாள் சனிக்கிழமை அதிகாலை அன்னையின் ஆலயத்தை அடைந்தோம். அன்னைக்கு அதிகாலை வேளை பூஜை நடந்து கொண்டிருந்தது. நாங்கள் எல்லோரும் குளித்துவிட்டு வந்து அன்னையைத் தரிசித்தபின், அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் அருள்வாக்கிற்குப் பெயரை பதிவு செய்ய வேண்டும் என்று காரியாலயத்தில் கேட்டோம். பதிவு செய்வது முடிந்துவிட்டது. மேற்கொண்டு செவ்வாய்க்கிழமை தான் முடியும் என்றார்கள். எனக்கோ என்ன செய்வது என்று புரியவில்லை. அச்சமயம் என் மனைவி ஒரு யோசனை சொன்னாள். நோயின் கடுமையை எடுத்துக் கூறினாள். ஒருவேளை அருள்வாக்கிற்கு அனுமதிப்பார்களோ என்றாள். நானும் அவ்வாறே மீண்டும் காரியாலயம் சென்று வினவ, அவர்களும் நோயாளி எனும் தகுதியில் அடுத்த நாள் காலை அருள்வாக்கிற்குஅனுமதித்துவிட்டார்கள்.

மறுநாள் காலை ஞாயிற்றுக்கிழமை அன்னையிடம் அருள்வாக்கிற்கு நான், எனது மனைவி, மாமியார் மூவரும் சென்று அமர்ந்தோம். அருள்வாக்கில் அன்னை சில ஆகார வகைகளைக்கூறி, அவைகளை அருந்தி வரும்படி சொல்லி ஒரு வருடம் கழித்து மீண்டும் வருமாறு உத்தரவு அளித்தாள். அன்றிரவு வீடு திரும்பினோம். அடுத்தநாள் காலை அன்னை சொன்ன ஆகார வகைகளை உண்பதிலே எந்தச் சிரமும் இருக்கவில்லை.

(தொடர்ச்சி…3ஆம் பக்கம்)

# புற்றுநோயைக் குணப்படுத்திய ...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

இன்றளவும் சாப்பிட்டுக்கொண்டு வருகின்றார்கள், நோயின் கடுமையும் முன்புபோல் இல்லை. வாயில் ஊறும் உமிழ் நீர் விழுங்க முடியாத நிலை ஒரு சொட்டுத் தண்ணீர் அருந்த முடியாத நிலை இந்நிலையிலே இருந்த என் மாமியார் அவர்களுக்கு மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தி அருளால் இத்துணை நன்மை ஏற்பட்டு உள்ளதை எண்ணும் பொழுதெல்லாம் கண்கள் குளமாகிப் பக்திக் கண்ணீர் வடிப்பதிலே பரவசமடைகின்றேன். வளர்க! அன்னையின் புகழ்!

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

**ஆன்மிக விடைதேடும்**
**அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த**

**www.adhiparasakthi.co.uk** **ஆதிபராசக்தி இணையத்தளம்**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

## ஓர் அர்ச்சகரின் அறியாமை போக்கிய அடிகளார்

ஒரு முறை அம்மா மதுரை, திண்டுக்கல் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டார்கள். மதுரையில் ஆதிபராசக்தி குழந்தைகள் காப்பகம் ஒன்று சிறப்புற நடைபெற்று வருகிறது. அங்கே தன் திருவடிகளைப் பதித்து அருளாசி நல்கிவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். பின் தமிழகத்தின் புகழ் பெற்ற ஆலயம் ஒன்றுக்குச் சென்றார்கள். அங்கே நம் அம்மாவுக்குப் பூரண கும்ப மரியாதை செய்தார்கள். பின் அம்மா கருவறைக்கு வெளியே செவ்வாடைத் தொண்டர்களோடு அமர்ந்துகொண்டார். கருவறையில் அபிடேகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அர்ச்சகர் ஒருவர் அபிடேகப் பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்து மற்றொருவருக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த அர்ச்சகர் அம்மாவுக்கு ஆலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பையும் மரியாதையையும் கண்டு சலிப்படைந்தார். யார் இந்த அடிகளார்? எதற்காக! இவருக்கு இவ்வளவு வரவேற்பு, தடபுடல்? எதற்கு இந்த செவ்வாடைக் கூட்டம் இவரை இப்படி தூக்கிவைத்துக்கொண்டு ஓகோ என்று பாராட்டுகிறது என்று பொருமிக்கொண்டேயிருந்தார்.

சற்று நேரத்தில் இரண்டு ஒளிக் கீற்றுகள் மின்னல் போலக் கருவறைக்குள் ஊடுருவிச் செல்வதைக் கண்டு அதிசயித்தபடி இந்த ஒளிக்கீற்றுகள் எங்கிருந்து வருகின்றன என்று பார்த்தார். அந்த ஒளிக் கீற்றுகள் அம்மா அவர்களின் கண்களிலிருந்து வெளிப்பட்டு கருவறையிலிருந்த விக்கிரகத்தின் மேல் வருவதை அறிந்தார். அதனையடுத்து அம்மா அருகே அமர்ந்திருந்த அத்துணை தொண்டர்களும் அன்னை ஆதிபராசக்தியின் பரிவார தேவதைகளாகத் தென்பட்டனராம். இந்த அற்புதக் காட்சி கண்ட அர்ச்சகர் வெலவெலத்துப் போனார். அடுத்த கணம் கருவறையில் அபிடேகம் முடிந்து கருவறை மூர்த்தத்திற்கு அலங்காரம் செய்யத் திரை போடப்பட்டது. அதன்பின்னரும் அம்மாவின் கண்களிலிருந்து புறப்பட்ட அந்த ஒளிக்கீற்றுகள் திரைச் சீலையையும் ஊடுருவிக்கொண்டு கருவறை விக்கிரகத்தின் மீது பாய்ந்த காட்சியைக் கண்டு அந்த அர்ச்சகர் பிரமித்துவிட்டார்.

அலங்காரம் எல்லாம் முடிந்து அம்மாவும் செவ்வாடைத் தொண்டர்களும் விடை பெற்றுக் கிளம்பிவிட்டனர். இது நடந்து சில சில நாட்கள் கழித்து நம் செவ்வாடைத் தொண்டர் ஒருவரிடம் அந்த அர்ச்சகர் கூறினாராம். “நானும் அந்த மேல்மருவத்தூர் அடிகளாரை ஏதோ சாதாரணமானவர் என்று தப்புக் கணக்குப்போட்டேன். நல்லவேளை, அந்த அம்பாள் எனக்கு உணர்த்திவிட்டாள். அம்பாளின் சொரூபமே அடிகளார்”என்று தான் பெற்ற அனுபவத்தைச் சொல்லி மகிழ்ந்தார்.

நெற்றியில் நிறைய திருநீறு, உருத்திராட்சம், காவி, கையில் கமண்டலம் போன்ற புறச் சின்னங்களை வைத்துத்தான் உலகம் ஆன்மிகத் துறையில் ஒருவரை எடை போடுகிறது. சித்த புருஷர்களும் அவதார புருஷர்களும் அந்த எல்லைகளைக் கடந்தவர்கள் என்று பலருக்குப் புரிவதில்லை.

# Melbourne - Mandrams – Upcoming Events – June 2017

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 02.06.2017 | Friday | வைகாசி | 19 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 04.06.2017 | Sunday | வைகாசி | 21 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 09.06.2017 | Friday | வைகாசி | 26 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 11.06.2017 | Sunday | வைகாசி | 28 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 16.06.2017 | Friday | ஆனி | 02 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 18.06.2017 | Sunday | ஆனி | 04 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 23.06.2017 | Friday | ஆனி | 09 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 25.06.2017 | Sunday | ஆனி | 11 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 30.06.2017 | Friday | ஆனி | 16 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |

**09.06.2017 – வெள்ளி - பௌர்ணமி, 23.06.2017 – வெள்ளி - அமாவாசை**

எதிர்வரும் விழாக்கள்:




# Sydney - Mandrams - Upcoming Events – June 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 02.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 16.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.06.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.06.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Divine Miracles at Melmaruvathur

### Divine secrets should not be made public:

Mother had asked one of Her devotees to come for a certain number of days to the temple. She wanted him to tread that soil and go back. That devotee had frequent work at Maduranthakam that was only five miles away from the temple. All the same due to some laziness or preoccupation he never came to the temple as instructed. He was a man with a lot of landed property and was an influential man in his village. However he had a long-standing dispute with another man over property and also other matters. Once when he was not in the village, a fight broke out between his employees and those of his rival. It led to a fracas in which there was some violence although none was killed. All the same it meant a police enquiry, court case etc., which involved him. He was vexed and approached Mother.

It was about time for the revelations to stop. Mother heard the devotee calling her hesitantly from behind and turned round. She looked at him and said, “My son! Divine secrets are never made public. That is why Ihad asked you to come a certain number times and tread this soil. You were too lazy even to visit me. Now you are kept busy running between the police station and the court. All the same I shall get you out of the present problem without harm”. When Mother asks a devotee to do some thing, his duty is only to do what She asked . It is not for us, ordinary mortals, to question the ‘why’s and wherefores’of those commands that is not properly understood by many devotees.

***

### இன்றைய மக்கள்:

“இன்றைய மக்கள் தனக்காகவும், தங்கத்திற்காகவும், பணத்திற்காகவும் உருகுகிறார்களே தவிர மற்றவர்களுக்காக உருகுவதில்லை.”

- அன்னையின் அருள்வாக்கு

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## சமாதி பற்றி

“உயிரை அடக்கி மீண்டும் அதனைக் கொண்டு வருவது தான் சமாதி, சமாதியில் இருப்பவன் எதிலும் சருகுபோல மிதக்கலாம்.”.

## ஆதிபராசக்தி சித்தர் பீடமும், வழிபாட்டு மன்றமும்

“மன்றம் என்பது கிணறு மாதிரி! இந்த மருவத்தூர் ஆறு மாதிரி! ஆற்றிலிருந்து தான் தண்ணீர் கிணற்றுக்கு வரும். ஆறாக இருந்தாலும் சரி! கிணறாக இருந்தாலும் சரி! நீங்கள் குடத்தில் தண்ணீர் மொண்டு சென்று குடிக்கிறீர்கள். கிணற்று நீரும் குறைந்தால் ஆற்றுக்குத்தான் வர வேண்டும்.”

## முழுமையாக நம்பி இருப்பவர்கட்கு

“கையில் அருள் என்னும் பழத்தை வைத்திருக்கிறேன். அதைக் கொண்டு எல்லோருடைய பசியையும் ஆற்ற முடியாது. அதனால் கையை இறுக மூடிக்கொண்டிருக்கிறேன். நம்பிக்கை இல்லாமல் வருபவர்கள் அனைவரும் போய் விட்டவுடன், என்னையே முழுமையாக நம்பி இருப்பவர்களுக்கு இந்த அமுதத்தைப் பகிர்ந்து கொடுக்கிறேன்.”

## கோவிலைச் சுற்ற வேண்டிய அவசியம் எனக்கு இல்லை

“நான் சந்நிதியைச் சுற்றி வலம் வருகிறேன் ஏன்? எனக்காகவா? அல்ல! எனக்காக நான் கோவிலைச் சுற்ற வேண்டிய அவசியம் இல்லை. அதையெல்லாம் கடந்தாகி விட்டது! அம்மாவின் நிழலில் நான் சாசுவதமாக இருக்கிறேன். உங்களுக்கு அந்த நிழல் வேண்டாமா? உங்களுக்காகவே நான் சுற்றுகிறேன்.

இங்குள்ள ஆன்மாக்களின் அழுக்குகள் நீங்கித் தூய்மை அடைவதற்காகத்தான் இங்கே நான் வலம் வருகிறேன்.”


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.**

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## உயிரைப் போக்கிக்கொள்ள உரிமை இல்லையடா!

கோவை மாவட்ட வெள்ளலூர் என்னும் ஊரைச் சேர்ந்த பக்தர் ஒருவரது கதை சோகம் நிரம்பியது. அவரே தம் அனுபங்களை நேரில் சொல்லியிருந்தார். அவர் வாயாலேயே அதைக் கேட்பது நமக்கு உணர்வு பூர்வமான அனுபவமாக இருக்கும். அவர் சொல்வதைக் கேட்போம்.

“15 ஆண்டுகளாக பிளாஸ்டிக் தொழிற்சாலை ஒன்றை வைத்து நடத்தி வந்தேன். அதில் 20 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து ஆதரவும் அளித்து வந்தேன். உழைப்பு! உழைப்பு! உழைப்பு! இதுவே என் தாரக மந்திரம்!

கடுமையான உழைப்பு, சத்தியம், தர்மம் ஆகியவற்றை மேற்கொண்டு சிறிது சிறிதாக வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டு வந்தேன். சிறுவயதிலிருந்தே எனக்கு முருகபக்தி. முருகனை வழிபடாமல் சாப்பிடமாட்டேன். வெள்ளிக்கிழமை கிருத்திகை நாட்களில் முருகன் கோயில் சென்று தரிசிக்காமல் இருந்ததில்லை.

கோயில் விசேடங்களுக்கும் ஏழை எளியோருக்கும் என்னால் முடிந்த தருமமும் செய்து வந்தேன். என் மனைவிக்கு அரசாங்கத்தில் உத்தியோகம். சுமார் 1000 ரூபாய்க்கு மேல் சம்பளம். இவள் வருமானம், என் வருமானம், மூன்று குழந்தைகள், எங்கள் வாழ்க்கை அமைதியாகவும், சீராகவும் ஓடிக் கொண்டிருந்தது.

### வாழ்வில் வந்த சோதனை

பிளாஸ்டிக்கை உருக்கிச் சாமான்களை உற்பத்தி செய்து வந்த காரணத்தாலோ என்னவோ அதன் இரசாயனப் பொருள்களால் என் நெற்றிப் புருவத்தில் மட்டும் திடீரென அரிப்பு ஏற்பட்டது. அரிப்பைத் தாங்க முடியாமல் கீறியதன் விளைவாகப் புண்ணாகி நீர் வடிய ஆரம்பித்தது.

தோல் சிகிச்சை நிபுணர் ஒருவரிடம் சென்று வைத்தியம் பாரத்தேன். ஆயினும் நோய் அதிகரித்தபடி இருந்தது. மேலும் மூன்று மருத்துவ நிபுணர்களிடம் சென்று காட்டினேன். அவர்கள் கொடுத்த மருந்துகளைச் சாப்பிட்ட பிறகு அதுவே அலர்ஜியாகி முகம், கழுத்துப் பகுதிகளில் கொப்புளம் கொப்புளமாக வர ஆரம்பித்துவிட்டது. என் முகம் விகாரமாக மாறிவிட்டது. அத்துடன் அரிப்பு, ஊரல், எரிச்சலோடு போராடிக் கொண்டிருந்தேன். இதனால் என் தொழில் சிறிது சிறிதாகப் பாதிக்கப்பட்டு வந்தது. இடையில் ஒவ்வொரு தோல்வியாதி நிபுணரிடமும் 3 மாதம், 6 மாதம் என்று அலைந்து ஒரு பயனும் ஏற்படவில்லை. நோய் அதிகரித்தபடியே இருந்தது.

### பாலக்காடு சென்றது

யாரோ சொன்னார்கள் என்பதற்காகப் பாலக்காடு சென்று அங்கு ஒரு வருடகாலம் தங்கியிருந்தேன். அங்கு ஓரளவு குணமானது. பின் கோவை வந்தேன். வந்து என் கம்பெனியைத் திறந்து தொழில் நடத்த ஆரம்பித்தேன். மீண்டும் ஒரு மாத காலத்தில் நோய் தாக்கியது.

ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், சென்னை, தருமபுரி ஆகிய இடங்களிலிருக்கும் தலைசிறந்த ஆஸ்பத்திரிகளுக்கெல்லாம் சென்று 3 மாதம், 6 மாதம் எனத் தங்கி சிகிச்சை பெற்றேன். பல்லாயிரக்கணக்கான ரூபாய் நஷ்டந்தான் ஏற்பட்டதே தவிர, நோய் குணமாகவில்லை.

### தருமபுரி சென்றது

ஒருவேளை இது தொழுநோயாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் என் நண்பரிடம் கேட்டேன். அவர் என்னைத் தருமபுரி தொழுநோய் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். என்னைப் பரிசோதித்த டாக்டர் “இது தொழுநோயல்ல. தொழுநோயாக இருந்தால் குணப்படுத்தி விடலாம். இது ஒருவகை அலர்ஜி. இந்த அலர்ஜி எதனால் ஏற்படுகிறது என்று உலக விஞ்ஞானிகளாலும் இன்றுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நோய் இது!

தங்களுக்கு வந்த நோய் ஆரம்பத்தில் சிறிதாக இருந்தாலும், அதற்காக நீங்கள் சாப்பிட்ட மருந்துகளும், போடப்பட்ட ஊசிகளும் அலர்ஜியாக மாறிவிட்டது. இனி ஆங்கில மருந்துகளால் குணமாகாது. சாப்பிட வேண்டாம். ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நோயோடு வாழக் கற்றுக் கொள்ளுங்கள்” என்று தீர்த்துச் சொல்லிவிட்டார் அந்த டாக்டர்.

### சித்த வைத்தியம்

வாழ்க்கையில் எனக்கிருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. இனி சித்த வைத்தியம் பார்ப்போம் என்று பார்த்தேன். சித்த வைத்திய மருந்துகள் சாப்பிட்டேன். அதுவும் அலர்ஜியாக மாறி எனக்கு உடல் முழுவதும் வீங்கி வெடிக்க ஆரம்பித்துவிட்டது.

### பாலக்காடு போனேன்

மீண்டும் பாலக்காடு போனேன். அங்கு பெற்ற சிகிச்சையால் நோய் குணமானது. ஆனாலும் முகத்திலும் கழுத்திலும் உள்ள நோயைப் போக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

### பழனிக்குப் போ!

வாழ்க்கையே வெறுத்துப்போன எனக்கு ஒரு பெரியவர் சொன்னார்.
“பழனியில் போய் 3 மாதங்கள் இரு! 90 நாள் விரதமிரு!”
“தினமும் காலை, மாலை பழனி மலையைச் சுற்றி வா! அங்குள்ள மூலிகைக் காற்று குணமாக்கலாம்! மலையேறி முருகனைத் தரிசித்து அங்கே இராக்கால சந்தனம், கவினார் தீர்த்தம், அபிடேகப் பால் ஆகியவற்றை வாங்கிச் சாப்பிடு!” என்றார். அவ்வாறே பழனி மலையில் 3 மாதம் தங்கி அவர் சொல்லியபடியெல்லாம் செய்து வந்தேன். நோய் ஓரளவு குணமானது!

(8ஆம் பக்க தொடர்ச்சி)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

## ஆறுபடை வீடு தரிசனம்

பிறகு குடும்பத்துடன் முருகனின் ஆறுபடை வீடு தரிசனம் செய்து நேர்த்திக்கடன் செய்துவிட்டு ஊர் வந்தேன்.

## இரண்டு இலட்சம் செலவு

மீண்டும் கம்பெனியை நடத்தலாம் என்றெண்ணி வரவு செலவுக் கணக்கை ஆராய்ந்தேன். பொருளாதார விஷயத்தில் நான் திவாலாகி விட்டேன் என்ற தெரிந்தது. இடைப்பட்ட நாட்களில் என் வைத்தியத்துக்காக இரண்டு இலட்சம் செலவாகியிருப்பது தெரிய வந்தது.

## எல்லாம் விற்று..

வங்கியிலிருந்த சேமிப்பு, வீட்டிலிருந்த நகைகள், ஸ்கூட்டர், டேப்ரிக்காடர், கைக்கடிகாரங்கள், குழந்தைகளின் கால் கொலுசு முதலியவற்றை விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். உடல் நோயோடு மன நோயாளியாகவும் மாறினேன்.

குடும்பத்தாரின் ஆலோசனைப்படி கொஞ்சமிருந்த நிலத்தை விற்று வெளிக்கடன்களைத் தீர்த்தேன். மனநோயும், உடல் நோயும் சேர்த்து கொண்டு என்னைப் பிடுங்கித் தின்றன.
கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கும்போது எனக்கே சகிக்கவில்லை. அந்தளவு முகம் விகாரமாகிவிட்டது. கோரமாக மாறிவிட்டது.

மற்றவர்கள் என்னைப் பார்க்க வருவதை விரும்பாமல் வீட்டோடு தனியறையில் அடைபட்டுக் கிடந்தேன். குடும்பத்தில் வறுமை தலைதூக்க ஆரம்பித்தது.

## வாழைத்தோட்டத்து ஐயன்கோயில்

கோவை அருகில் உள்ள வாழைத்தோட்டத்து ஐயன் கோயில் சென்று ஒரு மாதம் பத்தியமிருந்து, அங்கே கிடைக்கும் புனித நீரை உடம்பெல்லாம் பூசி வந்தால் குணமாகும் என்று பலரும் சொன்னார்கள். அந்த ஐயனைப் பிரார்த்தித்துக்கொண்டு பத்தியமிருந்து புனித நீர் பூசி வந்தேன். பலன் என்ன? நோய் இப்போது கடுமையாகத் தாக்கியது. வேதனை அதிகமானது. பக்கத்திலிருந்த அவினாசி ஆஸ்பத்திரியில் மீண்டும் அட்மிட் ஆனேன். 15 நாட்கள் அங்கே தங்கியிருந்தேன்.

## வாழ்க்கையை முடித்துக் கொள்வதுதான் வழி

அங்கிருந்த அந்த 15 நாளில் என் வாழ்க்கையை முடித்துக் கொள்வதுதான் சிறந்த வழி, இனி வேறு வழியில்லை என்ற எண்ணம் வந்தது. என்னால் யாருக்கு என்ன நன்மை? என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் என்னால் இனி என்ன நன்மை? மனைவி ஏதோ அவளது சம்பளத்தில் பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொள்வாள். என்னால் அவள் சம்பளத்தில் வைத்தியம் பார்க்க முடியாது. என்னையும், குழந்தைகளையும் ஒரு சேரக் காப்பாற்ற இனி அவளால் முடியாது. குடும்பத்திற்குப் பாரமாக எத்தனை நாள் இருப்பது? எனச் சிந்தனைகள் ஓடின.

கம்பெனியின் வரவு செலவுக் கணக்குகளைப் புரட்டிப் பார்த்தேன். கம்பெனியை விற்றுவிட்டால் வங்கிக்கடன், வெளிக்கடன் எல்லாம் அடைத்துவிடலாம். குடும்பத்திற்கும் கடன் சுமை வைக்காமல் நிம்மதியாகப் போய்ச்சேரலாம் என்ற முடிவிற்குத் தள்ளப்பட்டேன்.

மனித சக்திக்கு அப்பாற்பட்டது தெய்வசக்தி என்கிறார்கள். எந்தத் தெய்வமும் என்னைக் காப்பாற்றவில்லை. எல்லாத் தெய்வங்களும் என்னைக் கைவிட்டுவிட்டன.

எனக்குத் தொழில் திறமையிருந்தும், இப்படிக் கோரமான – விகாரமான முகத்தோடு வேலைக்குச் செல்ல முடியாத நிலை!

இனி உயிரோடு இருப்பதில் அர்த்தமில்லை.
இந்த ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டிற்குச் சென்றதும் தற்கொலை செய்துகொண்டு உலகத்தை விட்டே பிரிந்துவிட வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டேன்.

அவினாசி ஆஸ்பத்திரியில் மருத்துவச் செலவுகளுக்கு பணம் கட்ட வேண்டும். என் மனைவி ஊருக்குச் சென்று தெரிந்தவர்களிடமும், உறவினர்களிடமும் கடன் கேட்டு அலைந்திருக்கிறாள். மூன்று நாட்களாகப் பணத்திற்கு அலைந்திருக்கிறாள். கசப்பான அனுபவங்களையே பெற்றாள். அப்போதுதான் இந்த மனிதர்களைப் பற்றிப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. சாகப்போகிறவனுக்கு என்ன வைத்தியச் செலவு? என்று என் மனைவியிடமே கேட்டார்களாம்.

## மருவத்தூர் பற்றிக் கேள்விப்பட்டேன்

என் மருத்துவச் செலவிற்காக என் மனைவி அலைந்தபோதுதான் வெள்ளலூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றச் செயலாளர் திரு. வீரப்பத்தேவர் என் நிலைமையைக் கேள்விப்பட்டு அவளிடம் சொன்னாராம்.

நீங்கள் குடும்பத்தோடு ஒருமுறை மேல்மருவத்தூர் சென்று வாருங்கள். அம்மனை வேண்டி அங்கப் பிரதட்சணம் செய்யுங்கள். அங்கே அம்மா அருள்வாக்கு சொல்கிறாள். கட்டாயம் அருள்வாக்கு கேட்டுவிட்டு வாருங்கள். அம்மா மருந்து சொன்னாலும் சொல்வாள். அம்மா சொன்ன மருந்தை உண்டால் உன் கணவருக்கு நிச்சயம் குணமாகும். எப்படியாவது ஒரு தரம் அந்த மண்ணை மிதித்துவிட்டு அருள்வாக்குக் கேட்டுவிட்டு வாருங்கள். அப்புறம் பாருங்கள்” என்றார் அவர். என் மனைவிக்கு ஒரு சபலம்!

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

நேரே வெள்ளலூர் மன்றம் சென்றாள். "தாயே! என் கணவரை உன்னிடம் கூட்டிவரக்கூட என் கையில் தற்போது பணமில்லையே!"என்று வேண்டிக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டாள்.

அடுத்த நாள் ஆஸ்பத்திரிக்குப் பணம் கட்ட வேண்டும். மேல்மருவத்தூர் போக வேண்டும். தயவுசெய்து 2000 ரூபாய் கடன் கொடுக்க முடியுமா? என்று பக்கத்து வீட்டில் குடியிருப்பவர்களிடம் கேட்டிருக்கிறாள். அவர் கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு, ஆஸ்பத்திரியில் கட்டிவிட்டு, "நாம் நாளை மேல்மருவத்தூர் செல்கிறோம்" என்றாள். எதற்கு? என்றேன். மேல்மருவத்தூர் பற்றி வெள்ளலூர் மன்றச் செயலாளர் சொன்ன செய்திகளைக் கூறினாள். எனக்கோ எதிலும் நம்பிக்கை ஏற்படவில்லை. எல்லாக் கோயிலும் போய் ஆயிற்று! எந்தத் தெய்வமும் என் குறை தீர்க்கவில்லை. மேல்மருவத்தூர் போனால் மட்டும் தீர்ந்துவிடப் போகிறதா என்ன? மனைவி மனம் புண்படக்கூடாது என்பதற்காக "சரி போகலாம்" என்றேன். கோவை திரும்பினோம்.

## மருவத்தூர் புறப்பட முயற்சி

"கோவை – திருவள்ளுவர் பஸ் நிலையம் சென்று மதுராந்தகத்திற்கு இரண்டு டிக்கட் பதிவு செய்துவிட்டு வாருங்கள்" என்றாள் மனைவி. "அதெல்லாம் வேண்டாம்" என்று தட்டிக் கழித்தேன் நான்.

"கடைசியாக ஒரு முயற்சி.. ஒரேயொரு முயற்சி. மருவத்தூர் சென்றும் பார்த்துவிடலாமே..? கையில் பணமும் கிடைத்திருக்கிறதே.. எனக்கென்னவோ அங்கே போனால் குணமாகிவிடும் என்றே தோன்றுகிறது" என்றாள் மனைவி.

விரக்தியின் உச்சத்திலிருந்த நான் அவள் திருப்திக்காக பஸ் நிலையம் சென்றேன். என் முகத்தைத் துண்டால் மூடிக்கொண்டு விசாரித்தேன். வரிசையில் நின்று வரும்படிக் கூறினார்கள். அந்த நீண்ட வரிசையில் நிற்க முடியவில்லை. திரும்பி வந்துவிட்டேன்.

"நாளைக்குத்தான் டிக்கெட் பதிவு செய்வார்களாம்" என்று மனைவியிடம் பொய் சொன்னேன். மறுநாள் தானே சென்று டிக்கெட் பதிவு செய்துவிட்டு வந்தாள் அவள்.

## தற்கொலைக்குத் திட்டம்

16.03.1983 புதனன்று மாலை மேல்மருவத்தூர் புறப்பட ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள் அவள். நானோ ஆஸ்பத்திரியில் திட்டமிட்டபடி தற்கொலை செய்துகொள்ள என்ன வழி? என்று யோசித்துக்கொண்டிருந்தேன். இப்போதுள்ள நிலையில் வெளியே போய் விஷப்பொருள் எதுவும் வாங்கி வர முடியாது. இந்தச் சூழலில் தூக்கு மாட்டிக்கொண்டு முடித்துக்கொள்வது என்ற முடிவிற்கு வந்தேன்.

## 15.03.1983 அன்று நடந்தது

15.03.1983 செவ்வாய் இரவு என் மனைவி, என் குழந்தைகள், பொலிஸ் கமிஷனர் ஆகிய மூன்று பேர்களுக்கும் என் தற்கொலை முடிவு பற்றித் தனித்தனியாக கடிதம் எழுதி மேசை மேல் வைத்துவிட்டு அமர்ந்தேன். ஒரு மணி கூட நிம்மதியான தூக்கமில்லை. ஆறுமாதக் காலமாக இந்தப் போராட்டம். இனி நிரந்தரமாக, நிம்மதியாகத் தூங்கப் போகிறேன்.

கிணற்றில் தண்ணீர் இறைக்கும் கயிற்றை எடுத்து வந்து வைத்துக்கொண்டேன். படுக்கையறையில் என் மனைவியும், குழந்தைகளும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். எனவே, பக்கத்திலிருந்த சமையலறையில் என் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வது என முடிவு செய்தேன்.

தூக்குக் கயிற்றை மாட்டி, ஸ்டூலில் நின்று சரிபார்த்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை மனைவியையும், குழந்தைகளையும் வந்து பார்த்தேன். கண்ணீர் விட்டேன். மனத்தை உறுதியாக்கிக்கொண்டு மீண்டும் சமையலறைக்குத் திரும்பினேன்.

கயிற்றைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, ஒரு காலை ஸ்டூலில் வைத்துக்கொண்டு, தள்ள வேண்டும் என்பதற்காக மெதுவாகத் தள்ளிவிட்டேன். டமார் என்ற ஓசை கேட்டது. அதே நேரத்தில் கழுத்திற்கு மேல் ஒரு அடி நீளத்திற்குக் கயிறு அறுந்து நானும் கீழே விழுந்துவிட்டேன். விழுந்த அதிர்ச்சியில் ஒரு நிமிடம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு சமாளித்துக்கொண்டு படுக்கையறைக்குச் சென்று பார்த்தபோது, என் மனைவியும், குழந்தைகளும் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தனர்.

மீண்டும் சமையலறைக்குத் திரும்பி, கயிற்றை அவிழ்த்து எடுத்து வந்து, கட்டிலில் படுத்து ஆராய்ச்சி செய்தபடி அப்படியே உறங்கிப் போனேன்.

## உறக்கத்தில் ஒரு கனவு

அந்த உறக்கத்தில் ஒரு கனவு. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னை தோன்றினாள். ஆம்!

சுமார் 6 அடி உயரம். சிவப்பு மேனி, சிவப்புப் பட்டுப்புடவை. தலையில் வைரங்கள் ஜொலிக்க பெரிய கிரீடம். கழுத்திலே பெரியதொரு காசுமாலை. இருப்பிலே தங்க ஒட்டியாணம். காதிலே குண்டலம், மூக்கிலே தொங்குகிற வைர மூக்குத்தி. விரிந்த கூந்தல், அதிலே மல்லிகைப்பூ! கால்களில் சலங்கை அணிந்திருப்பது தெரியாவிட்டாலும் என் எதிரே வரும்பொழுது ஜல், ஜல் என்ற ஓசை கேட்கிறது. வலக்கையில் ஒரு பூக்கூடையோடு இடுப்பிலே ஒரு சின்னக் குழந்தை. அந்தக்குழந்தையின் கையில் ஒரு சிறிய வேலும், தலையில் கிரீடமும் உள்ளது.

(தொடர்ச்சி…10ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

இந்தக் கோலத்தில் என்னை நோக்கி அன்னை வருகிறாள். நான் தாயை வரவேற்க எழுந்து நிற்கிறேன்.

பக்கத்தில் வந்த அன்னை "இந்தா! இதைச் சாப்பிடு!" என்று சொல்லிப் பூக்கூடையை என் கையில் கொடுத்துவிட்டு மறைகிறாள்.

பூக்கூடைக்குள் கையை விட்டுப் பார்க்கிறேன். அதில் வேப்பிலைக் கொத்து ஒன்று இருக்கிறது! அதையெடுத்து இலைகளை உருவிச் சாப்பிடுகிறேன். கசப்பு என்றால் அவ்வளவு கசப்பு!

கசப்பு தாங்க முடியாமல் அப்படியே கண் விழித்துக் கொள்கிறேன். கையில் அந்தக் கயிறு, அதை எடுத்துச் சென்று மறைவான இடத்தில் வைத்துவிட்டேன். இரவு எழுதிய அந்த மூன்று கடிதங்களையும் எடுத்து அடுப்பில் போட்டு எரித்துவிட்டேன். மீண்டும் கட்டிலில் அமர்ந்து அந்தக் கனவு பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தேன்.

## மேல்மருவத்தூர் அன்னையில் திருவிளையாடல்தானோ?

மேல்மருவத்தூர் போகவேண்டும் என்று மனைவி தீவிர முயற்சி செய்கிறாள். நானோ தற்கொலை முடிவில் தீவிரமாகிவிட்டேன். அந்தத் தூக்குக்கயிறு என்ன பலமில்லாத கயிறா? ஒரு லாரியைக் கட்டியிழுக்கும் அளவுக்கு உறுதியான கயிறு! அதனை யாரோ அறுத்துவிட்டதுபோல ஆயிற்றே..? ஆறு மாதமாகத் தூங்காமலிருந்த நான் அன்று தூங்கியதும், கனவில் அன்னை வந்ததும், வேப்பிலை கொடுத்துச் சாப்பிடச் சொன்னதும் - இவையெல்லாம் என்ன? ஏன்? என்று மனம் சிந்தித்தது. எல்லாம் மேல்மருவத்தூர் அன்னையின் திருவிளையாடலே என்று தோன்றியது.

தற்கொலை முடிவைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது, மேல்மருவத்தூர் கிளம்புவது என்று முடிவெடுத்தேன்.

## மேல்மருவத்தூரில் பெற்ற அனுபவங்கள்

16.03.1983 இரவு கோவையிலிருந்து புறப்பட்டு, மறுநாள் காலை மேல்மருவத்தூர் சென்று மனைவியும் நானும் இறங்கினோம்.

உடல் வேதனை, முகத்தில் கொப்புளங்கள், அதிலிருந்து நீர் கசிந்தபடி இருந்ததால் பஸ்ஸில் முகத்தை மூடிக்கொண்டே பயணம் செய்தேன்.

விடியற்காலை நேரம். கோயிலில் ஒருபுறம் என்னைப் படுக்க வைத்துவிட்டு, மனைவி அருகிலிருந்த செவ்வாடைத் தொண்டர்களிடம் சென்று அருள்வாக்கு, அங்கப்பிரதட்சணம் செய்வது பற்றி விசாரித்தாள். திரும்பி வந்து கோயிலின் நடைமுறைகள் எடுத்துச் சொன்னாள்.

என் மனைவி ஈர உடையோடு முதலில் அங்கவலம் வந்தாள். அவளுக்கு அந்த அங்கவலத்தால் சந்தோஷம் பிடிபடவில்லை. மிக மகிழ்ச்சியோடு "நீங்களும் அங்கப்பிரதட்சணம் வாருங்கள். உங்களுக்குக் குணமாகிவிடும்"என்று உறுதிபடக் கூறினாள்.

"நானாக உருளவில்லை. ஒரு சக்தி என்னை உருட்டிக்கொண்டு போனதுபோல் இருந்தது. இங்கே சக்தி குடிகொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. நீங்களும் உருள்வலம் வந்துவிடுங்கள்"என்றாள்.

"இந்த உடம்போடு எப்படி உருள்வலம் வருவேன்?"என்று வேதனையோடு கேட்டேன்.

அன்னையிடம் கேட்போம். குணப்படுத்தினால் படுத்தட்டும். இல்லையேல் நம் இருவர் உயிரையும் இங்கேயே எடுத்துக்கொள்ளட்டும்" என்று அழுதுகொண்டே சொன்னாள். சரி! என்று நானும் ஒப்பினேன்.

## குளிக்கும்போது

உடம்பு நன்கு நனையும்படி குளித்து ஆறுமாதமாயிற்று. துண்டைத் தண்ணீரில் நனைத்துத் துடைத்துக்கொள்வதோடு சரி! அப்படியே உடம்பைத் துடைத்துக்கொண்டு அங்கவலம் வருவோம் என்று கருதிக் குளிக்கப் போனேன். குழாயில் எட்ட நின்றபடி இரு கைகளால் துண்டை நனைத்துக் கசக்கியபோது திடீரென்று குழாயில் தண்ணீர் வருவது நின்று போயிற்று. சரி! தண்ணீர் வரும்போது வரட்டும் என்று தரையில் அமர்ந்துகொண்டு துண்டைத் தரையில் வைத்து உருட்டிக் கொண்டிருந்தேன்.

சற்று நேரத்தில் எதிர்பாராதவாறு குழாயிலிருந்து தண்ணீர் கொட்டி, என் தலை, முகம், உடம்பெல்லாம் முழுக்க நனைந்தே போய்விட்டது. சரி! குளித்துவிட்டுத்தான் உருள்வலம் வரவேண்டும் என்பது இந்தத் தாயின் சித்தம்போலும்! என்ன ஆனாலும் ஆகட்டும் என்று துணிந்து நன்றாகவே குளித்து முடித்தேன். குளித்து முடித்தவுடன் வேதனை! மரண வேதனை!

## அங்கவல அனுபவம்

அந்த வேதனையோடு கருவறையின் முன்பு வந்து நின்றேன். "தற்கொலை செய்துகொள்ள இருந்த என்னைக் காப்பாற்றினாய். அதனால் என்னை உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன். என்னைக் காப்பதும், அழிப்பதும் உன் விருப்பம்" என்று வேண்டிக்கொண்டு கீழே படுத்து உருள்வலம் வர ஆரம்பித்தேன்.

புற்றுமண்டபம் தாண்டும்வரை எனக்குக் கொடிய வேதனையாக இருந்தது. சிறிது தூரம் போனதும் மேற்கொண்டு உருள முடியாமல் பேசாமல் அப்படியே படுத்துக் கிடந்தேன்.

(தொடர்ச்சி...11ஆம் பக்கம்)

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

என் கூடவே வந்துகொண்டிருந்த என் மனைவி ஓம் சக்தி! ஓம் சக்தி! என்று சத்தமிட்டு அழுதாள். உடனே திடீரென்று என் உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போல ஓர் உணர்வு ஏற்பட்டது. அதன்பிறகு என் உடல் தானாகவே உருள ஆரம்பித்துவிட்டது. கருவறைக்கு நேரெதிரே எப்படி உருண்டு வந்து சேர்ந்தேன் என்பதே தெரியவில்லை. பின் எழுந்து போய்க் குளித்துவிட்டு அர்ச்சனைப் பொருட்கள் வாங்குவதற்காக எதிரே ஒரு கடையின் முன்பு நானும் என் மனைவியும் நின்றிருந்தோம்.

### ஒரு வயதான பெண்மணி

கோவிலுக்குப் புதிதாகப்போன நான் கோவிலைப் பார்த்து ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்தேன். அப்போது.. கருவறையிலிருந்து ஒரு பெண்மணி வெளியே வந்தார். சுமார் 50 வயதிருக்கம். கையில் ஒரு பிளாஸ்டிக்கூடை. நேரே நாங்களிருக்கும் இடத்தை நோக்கி வந்தார்.

என் மனைவியின் தோளைத்தொட்டுத் திருப்பினார். “இந்தாம்மா! இந்தக் கூடையை வாங்கிக்கொள்” என்று கொடுத்தார். நானும் என் மனைவியும் எதற்கு? என்று கேட்டோம். அவர் சொன்னார்…

“என் கணவர் 60 வயதில் இறந்துவிடுவார் என்று சோதிடர்கள் எல்லாம் கூறிவிட்டார்கள். சில சாமியார்களும் சொல்லிவிட்டார்கள். கடைசியாக அம்மாவிடம் வந்து அருள்வாக்கு கேட்டேன். அம்மா சொன்னாள்.

### ஆறு பேர்க்கு மாங்கல்யப் பிச்சை கொடு!

“ஆறு பேருக்கு ஒரு மாங்கல்யப் பிச்சையைக் கொடு! ஏழாவது மாங்கல்யப் பிச்சை நான் உனக்குக் கொடுக்கிறேன்” என்றாள். அன்னையின் ஆணைப்படி இங்கே தங்கிக் கொண்டு செய்கிறோம். 5 நாள் தங்கி 5 பேர்க்குக் கொடுத்து முடித்துவிட்டோம். ஆறாவதாக இது ஒன்றுதான் பாக்கி!

இந்த ஒன்றை யாருக்குக் கொடுப்பது? என்று தெரியாமல் அம்மாவின் பாதத்தில் வைத்து எடுத்து வந்தேன். உங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று மனத்தில் தோன்றியது. பெற்றுக் கொள்ளுங்கள்” என்று சொல்லிக் கொடுத்தார்.

அது கேட்டு உணர்ச்சிவசப்பட்ட என் மனைவி, அந்தப் பெண்மணி கால்களில் விழுந்து கண்ணீரோடு பெற்றுக் கொண்டாள்.

“ஏன் அழுகிறாய் மகளே? அம்மா மண்ணை மிதித்துவிட்டாய் அல்லவா? உன் கணவருக்குக் குணமாகிவிடும்! கவலைப்படாதே!” என்று சொல்லிவிட்டு அந்த அம்மையார் போய்விட்டார்.

### கூடையிலிருந்தவை!

அர்ச்சனையை முடித்துவிட்டு அருள்வாக்கு கேட்கப் பெயர் பதிவு செய்துவிட்டு, ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு அந்த அம்மையார் கொடுத்த கூடையில் என்ன இருக்கிறது? என்று பார்த்தோம்.

விரல் மஞ்சள், மாங்கல்யக் கயிறு, குங்குமம், புஷ்பம், ஒரு சிவப்பு ஜாக்கெட் துண்டு, சீப்பு, கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, பணம் ஒரு ரூபா 50 சதம் ஆகியன இருந்தன.

அம்மாவே வந்து தனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்தாக எண்ணிப் பூரித்தாள் என் மனைவி. எனக்கோ 15.03.1983 இரவு 2.00 மணிக்கே என் தூக்குக் கயிற்றை அறுந்து விழச்செய்து அப்போதே மாங்கல்யப் பிச்சை கொடுத்துவிட்டாள் என்று தெரியும்.

அங்கங்கே பக்தர்கள் உட்கார்ந்துகொண்டு, அம்மாவின் சித்தாடல்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நானோ என் முகத்தை மூடிக்கொண்டு என் விகாரமான முகத்தைக் காட்டாமல், ஓரமாக நின்றபடி அவர்கள் பேசிக்கொண்டதையெல்லாம் காதால் கேட்டுக்கொண்டிருந்தேன். இப்படியெல்லாம் நடக்குமா…? என்று ஆச்சரியம் ஏற்பட்டது. எனக்கே அப்படி நடந்திருக்கிறதே!

அந்தப் பெண்மணி தங்கியிருப்பதாகச் சொன்னாரே.. அந்த அறைக்குச் சென்று விசாரிப்போம் என்று போனேன். “நீங்கள் சொல்கிற அடையாளப்படி இங்கு யாரும் தங்கவில்லை. நாங்கள்தான் ஒரு வாரகாலமாக இங்கே இருக்கிறோம்”என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்தப் பெண்மணி யார்?

### நெற்றியிலிருந்த ஒரு ஜோதி

என் மனைவியை மகிழ்விக்க, அன்னையே ஏன் வந்திருக்கக்கூடாது.

இதை உறுதிப்படுத்திக்கொள்ள, கருவறை மண்டபத்தின் முன்பு சென்று, உடல் சோர்ந்த நிலையில் ஒரு தூணில் சாய்ந்துகொண்டு “தாயே! உன் மகிமை எதுவும் எனக்குத் தெரியாது. என் உயிரைக் காத்தது – கனவில் தோன்றியது – மாங்கல்யப்பிச்சை கொடுக்க அந்தப் பெரியம்மா வடிவில் வந்தது – அனைத்தும் நீதான் என்றால் அதற்கான அறிகுறி ஒன்றைக் காட்டு!”என்று வேண்டிக்கொண்டு கண்ணீரோடு இருந்தேன்.

கருவறையில் அர்ச்சனை செய்தவர்கள் எல்லோரும் வெளியே வந்த பிறகு, அன்னையின் நெற்றியிலிருந்த வைரக்கல்லில் இருந்து ஒரு ஜோதி போன்ற ஒளி என்னை நோக்கி வர ஆரம்பித்தது. அதுகண்டு என் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். ஒன்றன்பின் ஒன்றாக மூன்று ஜோதிகள் என்னை நோக்கி மெதுவாக வருவதைக் கண்டேன்.

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – June 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 02.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 16.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.06.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.06.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

என் முகத்திற்கு ஒரு அடி தூரத்தில் அந்த மூன்று ஜோதியும் வந்து மறைந்தன. இந்தத் திருவிளையாடலை என் மனைவியிடம் சொல்ல விரைந்தேன். அவளோ அப்போது நன்கு உறங்கியபடி இருந்தாள்.

### வழக்கமாக வரும் இழுப்பு நோய்

எனக்கு அடிக்கடி மாலையில் காய்ச்சல் வரும். நோய் அதிகரிக்கும்போது முகம், உடல் எல்லாம் அரிப்புத் தோன்றும். அதே வேளையில் எனது இடதுகால் இழுக்க ஆரம்பித்துவிடும். இந்நிலையில் பொது இடமான இந்த ஆலயத்தில் அது வந்துவிடக்கூடாதே என்று பயந்தபடி இருந்தேன். அன்று மாலை வந்துவிட்டது. என் மனைவிக்கு பயம் வந்துவிட்டது.

"தாயே! உன் சந்நிதிக்கு வந்தும் இப்படியாகிவிட்டதே" என்று அழுதாள். அருகில் இருந்த செவ்வாடைத் தொண்டர்கள் ஆறுதல் கூறினர். என் காலின் மீது என் மனைவி ஏறி நின்று இழுப்பு நிற்கும் வரை அழுதுகொண்டே இருந்தாள். அந்தக் கொடுமை ஓரளவு தணிந்தபிறகே சுமார் 8.00 மணியளவில் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் என்னைப் படுக்க வைத்தாள். ஆறு மாத காலமாகத் தூக்கமில்லாமல் தவித்த நான் அம்மா மண்ணில் என்னை மறந்து உறங்கினேன்.

### மறுநாள் வெள்ளிக்கிழமை

மறுநாள் வெள்ளிக்கிழமை. என் மனைவி காலையில் எழுந்து நீராடி அங்கவலம் முடித்துவிட்டு வந்தாள். என்னை எழுப்பினாள். என் முகத்தை மூடியிருந்த துணியை அகற்றியவுடன் "ஐயோ! என்ன இது? இப்படியாகிவிட்டது?"என்று பதறினாள். கண்ணாடியை எடுத்து என் முகத்தைப் பார்த்தேன்.

இந்த நோய் வந்து எட்டாண்டு காலத்தில் வராத அளவிற்கு முகத்திலிருந்த கொப்புளங்கள் இப்போது பெரியதாகி சீழும் வடிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து எனக்கே பயமாகிவிட்டது. இன்னொரு மாற்றம். முகத்தைச் சுழித்தாலும், கழுத்தைச் சுழித்தாலும் வேதனையும் வலியும் தாங்க முடியாது. இப்போது அந்த வலியைக் காணோம். கொப்புளம்தான் பெரிதாக இருந்தது. சீழ் வடிந்தது. கண்ணாடியில் என் முகம் எனக்கே சகிக்கவில்லை. அவ்வளவு கோரம்!

தண்ணீரைத் தொட்டு கொப்புளங்களில் வடிந்த சீழைத் துடைக்கலாம் என்றெண்ணித் துடைத்தேன். என்ன ஆச்சரியம்..! ஒவ்வொரு கொப்புளமும் விரலால் தள்ளத்தள்ள விழுந்தபடி இருந்தது.

முகத்தை சவரம் செய்யும்போது சோப்போடு உரோமமும் சேர்ந்து வருவதுபோல, முகத்திலிருந்த கொப்புளங்கள் அனைத்தும் உதிர்ந்து வந்து விழுந்தன. எட்டாண்டு காலமாக என் முகத்தில் ஒட்டிக்கொண்டு பாடாய்ப்படுத்திய கொப்புளங்கள் ஒரு நாளிலே விழுந்துவிட்டன.

பிறகு குளித்துவிட்டு கருவறை அன்னையை வணங்கி, அங்கே கொடுத்த மஞ்சள் நீரை வாங்கி உடம்பு, முகம் எல்லாம் தேய்த்துக்கொண்டேன். அன்னையின் மந்திரிப்பும் பெற்றோம். அருள்வாக்கிற்காகக் காத்துக்கொண்டிருந்தோம்.

எங்கள் முறை வந்தது. அம்மா முன் சென்று அமர்ந்தோம்.

(தொடர்ச்சி..13ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – June 2017

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **11.06.2017** | **Sunday** | **09.00a.m.**<br>**06.10p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

### சீரழிந்து சின்னாபின்னப்பட்டு வந்திருக்கிறாய்...

அம்மா கனிவோடு பேசினாள். "மகனே! நோயினால் பாதிக்கப்பட்டு சீரழிந்து, சின்னாபின்னப்பட்டு வந்திருக்கிறாய். என்னைச் சரணடைந்துவிட்டாய். உன்னை நான் காப்பாற்றுவேன். ஆனாலும் உன் உயிரைப் போக்கிக்கொள்ள உனக்கு உரிமை இல்லையடா!

தினமும் வேப்பிலை சாப்பிட்டு வா!

பாசிப்பயிறு, மஞ்சள், எலுமிச்சம்பழத்தோல், வேப்பிலை ஆகியவற்றைப் பொடியாக்கித் தேய்த்துக் குளித்துக்கொண்டு வா!

நீ குடியிருக்கும் இடத்தை மாற்றிக்கொண்டு இடம் மாறி இரு! உத்தரவு"என்றாள்.

மறுநாள் சனிக்கிழமை மாலை வரை ஆலயத்திலேயே தங்கியிருந்தோம்.

கோவையைவிட்டு நீங்கிப் பழனியில் இருந்தேன். புண்கள் எல்லாம் குணமாயின. பழனி வரை வழிபாட்டு மன்றத்தில் கலந்துகொண்டேன்.

"மகனே! என் மகள் வடித்த கண்ணீருக்காகத் தூக்குக் கயிற்றிலிருந்து உன்னைக் காப்பாற்றி உன் ஆயுளை நீட்டித்திருக்கிறேன். அம்மாவின் பணியைத் தொடர்ந்து செய்! உன் வாழ்க்கையை அறப்பணியில் திருப்பிவிடு! சக்தியின் பிள்ளையாகிய உன்னையும், உன் குடும்பத்தையும் காப்பது என் பொறுப்பு! என் பணியை நீ செய்! உன் பணியை நான் செய்வேன். உத்தரவு"என்றாள்.

அவ்வாறே பழனியிலும், அதன் சுற்றுப்புறத்திலும் அம்மாவின் ஆன்மிக இயக்கம் பரவப் பிரச்சாரம் செய்து வந்தேன். மன்றங்கள் தொடங்கினோம். இப்போது அம்மாவின் அருளால் வாழ்க்கை வண்டி சீராக ஓடிக்கொண்டு இருக்கிறது.

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**வைகாசி - அமாவாசை–பௌர்ணமி:** செல்வம் உண்டாகும்.
எல்லா வகைகளிலும் செல்வம் சேரும் நிலை உருவாகும்.

**ஆனி – அமாவாசை–பௌர்ணமி :** திருமணம் நடைபெறும்..
தடைப்பட்ட திருமணம் விரைவில் நடைபெறும்..

# Melbourne - Mandrams – Upcoming Events – June 2017



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)



| | | | |
|---|---|---|---|
| 02.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 16.06.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.06.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.06.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 11.06.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.06.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## இயற்கை உணர்த்தும் பாடம்

புஞ்சை இல்லையென்றால் பஞ்சம் தீராது. இயற்கைக்கு வளர்ச்சி உண்டு. பூ பூத்துக் காய் காய்த்துப் பழம் பழுத்துப் பழத்தில் விதை உற்பத்தி ஆகிறது. அந்த விதையைக் கையிலேயே வைத்திருந்தால் பலன் கிடைக்குமா? பூமியைத் தோண்ட வேண்டும். விதையை நட வேண்டும். நீர் ஊற்ற வேண்டும். அப்புறம் தான் பழம் கிடைக்கும். மற்றவர்க்கும் பலன் கிடைக்கும்.

அதுபோலவே மனிதன் பிறக்கிறான், வளர்கிறான், இறக்கிறான். இப்படி வாழ்வதே வாழ்க்கையாகிவிட்டது. பிறந்தோம், வளர்ந்தோம் மற்றவர்களுக்கு நன்மை செய்துவிட்டுப் போவோம் என்று வாழ்ந்துவிட்டுப்போக வேண்டும். அந்த பழுமரம் போல உங்கள் வாழ்க்கை மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டும். இந்த எண்ணத்தோடு வழி வழியாக மனித குலம் வாழ்ந்தால் பயன் உண்டு.

## எட்டி இருக்கும்போது…

அடிகளார் நமக்குப் பழக்கப்பட்டவர்தானே என்று அன்று நினைத்தீர்கள். இப்பொழுது பார்க்கக்கூட முடியவில்லை என்று வருந்துகிறீர்கள். அருகில் இருந்தபோது அருமை தெரியவில்லை. எட்டி இருக்கும்போது தான் அருமை தெரிகிறது.

## அடிகளார் மனத்தில் கீறல் விழுந்தால்

என்னைப் பற்றியோ, அடிகளார் குடும்பம் பற்றியோ யார் என்ன சொன்னாலும் காது கொடுத்துக் கேட்கக் கூடாது. நீ இங்கு வந்த பிறகு உன் நிலைமை என்ன? உன் வளர்ச்சி என்ன? ஆலயம் என்ன? அடிகளார் யார்? ஆன்மிகம் என்றால் என்ன? என்று உன் உள் மனத்தில் என்ன தோன்றுகிறதோ, அதை நீ உணர்ந்து கொண்டால் போதும். உங்களுக்கு அடிகளார் தேவை. அடிகளார்க்கு நீங்கள் தேவையில்லை. அடிகளார் குடும்பத்தைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது. அடிகளார் மனத்தில் கீறல் விழுந்தால், உனக்கு நடக்க வேண்டியது எதுவும் நடக்காது.

- அன்னையின் அருள்வாக்கு

# உச்சந்தலையில் நெருப்பு!

வேம்பு

சென்னையில் நம் அன்னையின் பக்தர் ஒருவர். அவருக்குத் தொழில் ரீதியாகப் பல சோதனைகள். கப்பல் வியாபாரம் கோடிக்கணக்கில் சம்பாதித்தவர். சிறுகச் சிறுக நஷ்டம் அடைந்து வந்தார். அம்மாவிடம் வருவதற்கு முன்பே பல சாமியார்களிடமும், மகான்களிடமும் போய் வந்தவர். யாரோ அவருக்குச் சக்கரம் ஒன்றை வரைந்து கொடுத்தார்கள். அதனை அவர் தொழில் நிறுவனத்தில் வைத்து பூஜை செய்து வந்தார். ஊழ்வினை முடிச்சு பலமாக இருக்கும்போது எந்தச் சக்கரமும் எந்தப் பயனும் கொடுத்து விடாது. அது மட்டுமன்று. சக்கரம் வைத்து பூஜை செய்வோர் பின்பற்ற வேண்டிய நியமங்கள் உண்டு. அதை அவர் சிரத்தையாகப் பின்பற்றினாரா! இல்லையா.. என்பது நமக்குத் தெரியாது. அந்தச் சக்கரம் அவருக்குப் பொருத்தமான உதவி தருகிற சக்கரம் தானா? என்பதும் நமக்குத் தெரியாது. தொழில் நஷ்டம் கருதி அம்மாவிடம் வந்தார்.

அம்மா அவரைச் சற்றுப் பொறுமையாக இருக்கும்படிக் கூறினாள். தற்போது எந்தத் தொழில் முயற்சியையும் மேற்கொள்ள வேண்டாம் என்று கூறினாள்.

## கடலில் வீசிய சக்கரம்:

ஒரு முறை நம் ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் அவர்களைத் தம் தொழில் நிறுவனத்துக்கு அழைத்துச் சென்றார். தனக்குச் சொந்தமாக உள்ள கப்பல் தளத்துக்கும் அழைத்துச் சென்றார்.
கப்பலைச் சுற்றி வந்து அடிகளார் பார்வையிட்டபோது.. தாம் வழிபட்டு வந்த சக்கரத்தை எடுத்துக்கொண்டு வந்து அருள்திரு அடிகளார் அவர்களிடம் கொடுத்தார்.
அதனை வாங்கிப் பார்த்த அடிகளார் “இதெல்லாம் உங்களுக்கு இனி தேவையில்லை”என்று சொல்லி அதனைக் கடலில் வீசி விட்டார். அடிகளாரோடு கப்பல் தளத்தில் மேலும் சிலர் இருந்தார்கள்.

அந்தச் சக்கரத்தை அடிகளார் கடலில் வீசியது அந்தத் தொழிலதிபருக்கு உள்ளூர வருத்தமாகப் போய்விட்டது. அதுவரை கலகலப்பாகப் பேசி வந்தவர் பேச்சில் சுவாரஸ்யமின்றிக் கலந்து கொண்டார். அடிகளார் அதனைக் கவனித்துவிட்டார்.

“என்ன சார்.. அந்தச் சக்கரத்தைக் கடலில் வீசி எறிந்து விட்டது உங்களுக்கு வருத்தமாகப் போய்விட்டது. அவ்வளவுதானே.. இதோ.. அதையே வரவழைத்துக் கொடுக்கிறேன், போதுமா..”எனச் சொல்லிக் கை நீட்டினார். கடலில் வீசியெறியப்பட்ட அந்தச் சக்கரம் அடிகளார் கைக்கு வந்துவிட்டது.

ஆரம்பத்தில் அடிகளாரின் சக்தி எப்படிப்பட்டது என்பது அந்த நாள் தொண்டர்கள் பலருக்குத் தெரியாது. அடிகளாரும் தன்னை மறைத்துக்கொண்டே தொண்டர்களுடன் சகஜமாக் பழகி வந்த காலம் அது! மேற்கண்ட சம்பவத்துக்குப் பிறகுதான் அடிகளாரின் சக்தி பற்றி ஓரளவு புரிந்துகொண்டார் அந்தத் தொழில் அதிபர்.

## குடும்ப நல வேள்வி செய்!

அருள்வாக்கு கேட்கிறபோதெல்லாம் தனது தொழில் பற்றி அவர் கேட்டுக்கொண்டேயிருந்தார். “அடிகளாரை அழைத்துச் சென்று உன் வீட்டில் குடும்பநல வேள்வி செய்ய ஏற்பாடு செய்துகொள்!”என்று அன்னை கூறினாள்.

அடிகளாரைத் தம் இல்லத்துக்கு எழுந்தருளுமாறு பல முறை வேண்டிக்கொண்டார் அந்த அன்பர். அடிகளார் ஒப்புதல் அளித்த போதிலும் ஒவ்வொரு முறையும் தடங்கல் வந்தபடியே இருந்தது.

## நாள் கடந்தபடி இருந்தது:

எதற்கும் நேரம் காலம் கூடி வந்தால்தான் எதுவும் நடக்கும்.
“அவசரப்படாதீர்கள் நானே வந்துதான் அந்த வேள்வியை நடத்த வேண்டும். நேரம் காலம் வரட்டும், பார்க்கலாம்”என்று அடிகளார் அந்த அன்பர்க்குச் சொல்லி இருந்தார்கள்.

ஒருநாள் அந்த அன்பரை அழைத்து “இன்ன நாளில் உங்கள் வீட்டில் குடும்ப நல வேள்வி வைத்துக் கொள்ளுங்கள். அதற்கான ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்..”என்றார்.

அடிகளாரே நேரில் வந்து செய்ய வேண்டும் என்று கூறியிருப்பதால் மிக ஜாக்கிரதையாகவும் எச்சரிக்கை உணர்வோடும் பயபக்தியோடும் செய்யப்பட வேண்டிய குடும்ப நலவேள்வி இது என்பதை ஓணம்பாக்கம் சக்தி சுப்பராயன் அவர்கள் புரிந்து கொண்டார். சித்தர் பீடத்து மத்திய வேள்விக்குழுவின் முக்கிய பொறுப்பாளர் அவர்.
எனவே நம் சித்தர் பீடத்தின் ஆரம்ப காலங்கள்தொட்டு வேள்விப் பணி புரிந்த அனுபவ முதிர்ச்சி பெற்ற தொண்டர்கள் சிலரை அழைத்துக்கொண்டு முதல் நாள் மாலையே அந்த வீட்டிற்குச் சென்று தங்கினார்.

(தொடர்ச்சி..16ஆம் பக்கம்)

# உச்சந்தலையில்...

அப்போது அந்த அன்பர் மாடியிலிருந்தார். தொண்டர்கள் வேள்வியின் முதற்கட்டமாகச் சுற்று பூஜை செய்ய வேண்டி வீட்டைச் சுற்றி மஞ்சள் நீர் தெளித்து எலுமிச்சம்பழம் பூசணிக்காய் திருஷ்டி கழித்துவிட்டுத் தீபாராதனை செய்துவிட்டு ஓய்வாக அமர்ந்துகொண்டு கீழே ஓர் அறையில் அம்மா கதைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது...
அந்த அன்பர் வீட்டின் மாடிப்படியிலிருந்து தடதடவென்று இறங்கிவந்தார். "ஏம்பா! ஏம்பா! கட்டிலில் படுத்தால் ஏதோ ஒன்று என்னை அழுத்துவது போல் உள்ளது. பயமாக இருக்கிறது. வந்து பாருங்கள்!"என்று அவசரப்படுத்தினார்.

உடனே தொண்டர்கள் மாடிக்கு விரைந்தனர். அங்கே நான்கு மூலைகளிலும் எலுமிச்சம்பழ திருஷ்டி கழிக்கப்பட்டது. வீட்டைச்சுற்றி நான்கு மூலைகளிலும் பூசணிக்காய் திருஷ்டி கழிக்கப்பட்டது.

மறுநாள் காலை வேள்விக்குரிய ஆயத்தப்பணிகள் தொடங்கின. தான் வந்த பிறகுதான் வேள்வி தொடங்கவேண்டும் என்பது அருள்திரு அடிகளார் உத்தரவு!

ஜன்னல் கதவுகள் அடித்துக்கொண்டன

இந்த ஆயத்தப்பணிகள் தொடங்கும்போதே சினிமாவில் ஆவிகள் வருகிறபோது நடக்குமே.. அதுமாதிரி ஜன்னல் கதவுகள் காற்றில்லாமலே அசைந்தாடிக்கொண்டிருந்தன.

ஒரு ஜன்னல் கதவு ஆணிகளைப் பெயர்த்துக்கொண்டு படாரென்று வேள்வி நடக்கவுள்ள அறையின் வெளியே சத்தத்தோடு விழுந்தது.

தீய சக்திகள் எச்சரிக்கை அடைந்தன போலும் நம் தொண்டர்களும் எச்சரிக்கை அடைந்தார்கள்.

சற்று நேரத்தில் அடிகளார் அங்கே வந்து சேர்ந்தார்கள். அந்த வீட்டைச் சுற்றிப் பார்வையால் தன் அருளைப் பாய்ச்சினார்கள். அந்த வீட்டு அன்பரை தன் அருகிலேயே இருக்கும்படி உத்தரவிட்டார்கள்.

மூலமந்திரத்துடன் வேள்வி தொடங்கப்பட்டது. அடிகளார் கற்பூரத்தைக் குண்டத்தில் ஏற்றி வைத்து வேள்விச் சுள்ளிகளை எரிய வைத்து "தொடங்கு"என்று சைகை காட்டினார்கள். 1008 மந்திரங்கள் படிக்க ஆரம்பித்தார்கள்.

இடையிடையே ஓணம்பாக்கம் சின்னவர்க்குச் சில குறிப்புகள் கொடுத்தபடி இருந்தார்கள். அந்த எச்சரிக்கைக்குத் தக்கபடி பூசணிக்காய்கள், எலுமிச்சம்பழங்கள், திருஷ்டி கழிக்கப்பட்டன.

மற்ற இடங்களில் அன்னையின் மந்திரம் சொல்லி திக்பந்தனம் செய்வோம்.

இந்த வேள்வியிலோ அன்னை ஆதிபராசக்தியின் அவதாரமான அருள்திரு அடிகளார் அவர்களே எழுந்தருளியிருப்பதால் அம்மா பார்வையாலேயே தொண்டர்களுக்கு திக்பந்தனம் செய்துவிட்டாள்.

1008 மந்திரம் தொடர்ந்தது.. அறையின் வெளியே இன்னொரு ஜன்னல் தடார் என்று பிய்த்துக்கொண்டு விழுந்த சப்தம் கேட்டது. அறையின் உள்ளே எது பற்றியும் சஞ்சலம் இல்லாத நிலையில் அடிகளாரின் பாதுகாப்பில் மந்திர வழிபாடு தொடர்ந்தது.

வேள்வி முடிந்து அம்மாவின் திருக்கரங்களால் விளக்கு எடுத்து குடும்பத் தலைவரிடம் கொடுக்கும்பொழுது அந்தச் சம்பவம் அங்கிருந்த அனைவரையும் திடுக்கிட வைத்தது.
ஆம்!
அந்த வீட்டுக்குரிய தொழில் அதிபரின் உச்சந்தலையில் குபீரென்று தீப்பற்றி எரிந்தது.
உடனே சட்டென்று அடிகளார் அந்த அன்பரின் உச்சந்தலையில் தன் கைகளை அழுத்தமாக வைத்துக்கொண்டு சில நிமிடம் நின்றார்கள். 108 மந்திர வழிபாடும் முடிந்தது.

பின் அடிகளார் கற்பூரத்தட்டை எடுத்து அன்னைக்கும் வேள்வி குண்டத்துக்கும் தீபாராதனை காட்டினார். வேள்விக் கலசத் தீர்த்தத்தை தன் திருக்கரங்களால் எடுத்துக்கொண்டு அந்த பங்களாவின் வாயிற்படி, அறைகள், தோட்டம், கிணறு, வீட்டின் நான்கு மூலைகள் ஆகியவற்றைச் சுற்றிக் கலச தீர்த்தம் தெளித்தார்கள்.

"என்ன சார்! இந்த மாதிரி குடும்பநல வேள்வியை எங்காவது பார்த்திருக்கிறீர்களா..? இந்த வேள்வியின் பின்னால் என்னென்ன சமாச்சாரமெல்லாம் இருக்குன்னு தெரிந்துகொண்டீர்களா? அம்மா என்னென்னவற்றையெல்லாம் காட்டிக் கொடுத்துச்சி பார்த்தீர்களா?"என்று கேட்டார்கள் அடிகளார். அந்தத் தொழிலதிபரோ வியப்பில் உறைந்துபோய் நின்றிருந்தார்.

(தொடர்ச்சி..17ஆம் பக்கம்)

# உச்சந்தலையில்...

(17ஆம் பக்க தொடர்ச்சி)

“நானே வந்துதான் இந்தக் குடும்ப நல வேள்வி செய்யவேண்டும் என்றதற்கு அர்த்தம் புரிந்ததா? இந்த வேள்விக்கு அம்மா நாள் கொடுக்காமல் தள்ளிப் போட்டதற்கு காரணம் உண்டா..! இனி இந்தக் குடும்பத்தைப் பிடித்த பீடை தொலைந்தது. படிப்டியாகத்தான் நல்லகாலம் வரும்”என்று சொல்லிவிட்டு அவரிடமிருந்து அடிகளார் விடை பெற்றுச் சென்றார்கள்.

யாரிடமிருந்தோ – எப்போதோ வாங்கிய பங்களா அது! எப்பொதோ – யாரால் செய்யப்பட்ட செய்வினையோ – யார் செய்த கருமமோ – அந்த வீட்டில் குடியிருந்த பாவத்தால் அந்தத் தொழிலதிபருக்கு இவ்வளவு துன்பங்கள்! சோதனைகள்!
ஓம் சக்தி!

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம் |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

## வைரம் பாய்ந்த ஆன்மா!

“போகும்போது எதைக்கொண்டு போகப் போகிறீர்கள்? ஒன்றும் இல்லை. சுட்ட பானை போல, ஆன்மா வைரம் பாய்ந்ததாக மாற வேண்டும்”.

## ஆன்ம பக்குவம் படிப்படியாக வரும்

“உயரமான மரத்தில் ஏறும்பாது ஏறிவிடுவாய். மேலே இருந்து கீழே பார்த்தால், பயமாக இருக்கும். இறங்கத் தெரியாமல் நெஞ்சே நடுங்கும். சிறிய மரத்தில் ஏறி இறங்கிப் பழகியிருந்தால் பயம் தெரியாது.
அதுபோல முதலில் இருந்தே ஆன்மிகத்துக்கு வந்துவிட்டவன், படிப்படியாகப் பக்குவம் பெறுவான். அவன் ஆன்மா சுத்தமாகவும், தெளிவாகவும் இருக்கும்.”

**- அன்னையின் அருள்வாக்கு**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 03.06.2017 | சனி | வைகாசி | 20 | வைகாசி விசாகம் - முருகன் ஏகதின இலட்சார்ச்சனை<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 05.06.2017 | திங்கள் | வைகாசி | 22 | **ஏகாதசி விரதம்** |
| 07.06.2017 | புதன் | வைகாசி | 24 | **வைகாசி விசாகம் - பிரதோஷ விரதம்** |
| 09.06.2017 | வெள்ளி | வைகாசி | 26 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப்பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம்-சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 11.06.2017 | ஞாயிறு | வைகாசி | 28 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 13.06.2017 | செவ்வாய் | வைகாசி | 30 | சங்கட சதுர்த்தி |
| 20.06.2017 | செவ்வாய் | ஆனி | 06 | ஏகாதசி விரதம் |
| 21.06.2017 | புதன் | ஆனி | 07 | கார்த்திகை விரதம் |
| 22.06.2017 | வியாழன் | ஆனி | 08 | பிரதோஷ விரதம் |
| 24.06.2017 | சனி | ஆனி | 10 | **அமாவாசை விரதம்**<br>**கொடியேற்றம் - நயினை நாகபூசணி அம்மன்** |
| 09.07.2017 | ஞாயிறு | ஆனி | 25 | **குரு பூர்ணிமா – 11ஆவது குரு பூரணை அனுஷ்டிப்பு**<br>- மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 18.07.2017 | செவ்வாய் | ஆடி | 02 | ஆடிச் செவ்வாய் 1ஆவது வாரம் |
| 25.07.2017 | செவ்வாய் | ஆடி | 09 | ஆடிச் செவ்வாய் 2ஆவது வாரம் |
| 28.07.2017 | வெள்ளி | ஆடி | 12 | கொடியேற்றம் - நல்லூர் கந்தசாமி கோயில் - இலங்கை |
| 01.08.2017 | செவ்வாய் | ஆடி | 16 | ஆடிச் செவ்வாய் 3ஆவது வாரம் |
| 08.08.2017 | செவ்வாய் | ஆடி | 23 | ஆடிச் செவ்வாய் 4ஆவது வாரம் |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*பாமர மக்கள் பசுமையாக வாழ எங்கள் பங்கு என்ன?*

முதலில் நீங்கள் உயர்ந்த குடியில் பிறந்த செல்வந்தரா? என்று எனக்குத் தெரிய வேண்டும். பிறகுதான் நீங்கள் பாமர மக்களுக்கு என்ன செய்யலாம்? என்று நான் சொல்ல முடியும். உங்கள் சொத்தில் ஒரு பங்கைத் தர்மம் செய்வீர்களா? ஆட்சி செய்கிற அரசாங்கமே வறட்சியாக இருக்கிறது. தனிமனிதனாக நீங்கள் என்ன செய்ய முடியும்? முடிந்தால் தொண்டு நிறுவனத்துடன் உங்களை இணைத்துக்கொண்டு தொண்டு செய்யலாம்.

கள்ளச்சாராயத்தை குடித்துவிட்டு அநியாயமாகச் சாகும் மக்கள், சாராயம் குடிப்பதை அறவே விட்டொழித்தால் அவரவர் குடும்பத்தை அவரவர் கௌரவமாக வாழ வைக்கலாம். சாராயம் என்று ஒழிகிறதோ, அன்றுதான் பாமர மக்களின் வாழ்வும் பசுமையாக இருக்கும்.